# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 172 | வெள்ளிக்கிழமை Friday | 18.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடந்தது



17 ஆண்டுகளுக்கு பிறகு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மகா கும்பாபிஷேகம் கோலா-கலமாக இன்று நடை-பெற்றது. இதைக்காண லட்சக்கணக்கான பக்-தர்கள் குவிந்தனர். உல-கப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் கும்பாபிஷேகத்திற்காக பல மாதங்களாக திருப்பணிகள் ரூ.25 கோடி மதிப்பில் நடந்தன. தீ விபத்தில் சேதம் அடைந்தவீரவசந்தராயர் மண்டபம் புனரமை க்-கப்பட்டு திறக்கப்பட்டது. யாகசாலை பூஜைக்காக வடக்கு ஆடி வீதியில் 184 குண்டங்க ளுடன் பிர-மாண்ட யாகசாலை அமைக்கப்பட்டது. மூல-வர் மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரருக்காக பிரத்யேகதங்க குடங்கள் யாக சாலையில் வைக்-கப்பட்டன. கங்கை, யமுனை, 1 காவிரி, வைகை உள்ளிட்ட பல்-வேறு நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்டபுனி-தநீரை கலசங்களில் நிரப்பி யாகசா லையில் வைத்து தினமும் பூஜை-கள் நடந்து வந்தன. 400-க்கும் மேற்பட்ட சிவாச்-சாரியார்கள் வேள்விகளை நடத்தி-னர். கடந்த 11-ந் தேதி-யன்று முதல்கால யாக பூஜைகள் தொடங்கிய நிலையில், மற்ற கால பூஜைகளும் நடந்து வந்-தன. பரிவார தெய்வங்க-ளுக்கு கும்பாபிஷேகம்

நேற்று அதிகாலை 3.45 மணி அளவில் 10-ம்கால யாகசாலை பூஜைகள் நடந்தன. அந்த வழிபாடு நிறைவு பெற்ற பிறகு பரி-வாரதெய்வங்களுக்கான கும்பாபிஷேகம் தொடங்கியது. மேளதா-ளங்கள் முழங்க யானை, டங்கா மாடு அணிவ-குத்து செல்ல யாகசா-லையில்இருந்துபுனிதநீர் கலசங்கள் புறப்பாடாகி கோவிலுக்குள் உள்ள பரிவார தெய்வங்கள் சன்னதிக்கு கொண்டு செல்லப்பட்டன.

காலை 5 மணி முதல் 6 மணிக்குள் சித்தி விநா-யகர், கூடல்குமாரர், தட்-சிணாமூர்த்தி. துர்க்கை, மகாலட்சுமி, பத்திர-காளி, அக்னி வீரபத்திரர், 63நாயன்மார்கள்,நவகி-ரகங்கள் உள்பட 414 பரி-வார தெய்வங்களுக்கு நேற்று புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தது. மூலவர் மீனாட்சி அம்-மன் - சுந்தரேசுவரர், தங்க விமானங்கள், சன்-னதி விமானங்கள், 12 கோபுரங்கள் உள்ளிட்ட-வற்றுக்கான கும்ப கல-சங்களுக்கு நேற்று மாலை 11-ம் கால யாக-சாலை பூஜைகள் நடந்-தன. இதில் பல்லாயிரக்-கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

விழாவின் சிகரமாக மீனாட்சிஅம்மன்-சுந்த-ரேசுவரர் மகா கும்பாபிஷேக விழா இன்று காலை கோலாக-லமாக நடைபெற்றது. முன்னதாக இன்று அதி-காலை 3.45 மணிக்கு 12-ம் கால யாக பூஜை நடை-பெற்றது. யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட கடங்கள் புறப்பாடு 5.45 மணிக்கு நடைபெற்றது. அதனை சிவாச்சாரி யார்கள் 4ராஜகோபுரங்-கள் உள்பட 12கோபுரங்-கள் தங்க விமான ங்க-ளுக்கு கொண்டு சென்றபிறகு சரியாக 7.40 மணியளவில் கோபுரங்-களுக்கு கும்பாபிஷேகம் கோலாகலமாக நடை-பெற்றது. வேத மந்திரங்-கள் ஒலிக்ககலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டது.

அப்போது அங்கு குவிந்திருந்த லட்சக்க-ணக்கான பக்தர்கள் மனம் உருகி சாமி தரிச-னம் செய்தனர். பக்தர்க-ளின் பக்தி கோஷங்கள் விண்ணதிர முழங்கின. பின்னர் தீபாராதனை காட்டப்பட்டது. தொடர்ந்து டிரோன்கள் மூலம் பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்-டது. மாசி வீதிகளில் குவிந்துள்ள மக்கள், பக்திப் பரவசத்துடன் குடமுழுக்கை கண்டு மனம் குளிர்ந்தனர்.கும்-பாபிஷேகத்தை கோவி-லின் மேல் தளத்தில் இருந்து காண 9 ஆயிரம் பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. 17 ஆண்டுகளுக்கு பிறகு மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை காண தமிழகம் மட்டு-மின்றி பல்வேறு மாநி-லங்களில் இருந்து பக்-தர்கள் சாரை,சாரையாக குவிந்துள்ளனர்.

பின்புமூலவர்மீனாட்சி அம்மனுக்கு காலை 8.10 மணிக்கும், சுந்தரேசுவரருக்கு 8.50 மணிக்கும் புனித நீரால் மகா கும்பாபிஷேம் நடைபெற்றது. அதன்-பின்னர் அலங்காரம், சிறப்பு தீபாராதனைகள் நடைபெற்றது. காலை 10 மணி முதல் இரவு வரை நடைசாத்தப்படாமல் மூலவர் தரிசனத்திற்கு பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்தை காண முடியாத பக்தர்க-ளுக்காக இன்றிரவு 7 மணிக்கு நான்கு மாசி வீதிகளிலும் மீனாட்சி, சுந்தரேசுவரர் வீதி உலா வந்து காட்சி அளிக்கி உள்ளனர்.

12கோபுரங்கள்,மதில்-சுவர்கள், மரங்கள், பொற்றாமரைக்குளம் ஆகிய இடங்களில்சிறப்பு அலங்காரம் செய்யப்-பட்டுள்ளன. கோபுரங்க-ளில் சிவ சிவ என மின்-விளக்குகளால் அழகுற அமைக்கப்பட்டு உள்-ளது. திருப்பணிகளால் ராஜகோபுரங்கள் பளிச்-சிட்டு புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றன. மேலும் அழகு சேர்க்கும் விதமாகராஜகோபுரங்க-ளுக்கு பிரமாண்ட மாலைகள் அணிவிக்-கப்பட்டு இருப்பது பக்-தர்களை பரவசம் அடை-யச்செய்துள்ளது. இதே போல் கோவிலின் உள்ளே வாழை தோரணங்களும் அணிவகுத்து கட்டப்-பட்டு உள்ளன. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு நிகழ்வின்போது பக்தர்-களுக்கு நான்கு ஆவணி மூல வீதிகள் வரை மட்-டுமே அனுமதி அளிக்-கப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்தபக்தர்களுக்கு 2 லட்சம் பிரசாத பைகள் வழங்கப்பட உள்ளன. கோயிலுக்கு செல்லும் வழித்தடங்களை தெரிந்து கொள்ள கியூ ஆர் கோடுடன் கூடிய அறிவிப்பு பலகை வைக்-கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி சார்பில் 17 சுத்திகரிக்கப்பட்ட குடி-நீர் நிலையங்கள், 26 குடிநீர் தொட்டிகள் ஏற்-பாடு செய்யப்பட்டுள்-ளது.

# "சமத்துவ இலக்கை நோக்கி சமூகநீதிப் பாதையில் சுயமரியாதையோடு நடைபோடுவோம்"

## பெரியார் சிலைக்கு மரியாதை செலுத்திய பின் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: "சமத்துவ இலக்கை நோக்கி சமூகநீதிப் பாதையில் சுயமரியாதையோடு நடைபோடுவோம்" என பெரியார் சிலைக்கு மரியாதை செலுத்திய பின் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரி-வித்துள்ளார்.

பெரியாரின் பிறந்த-நாள் மற்றும் சமூகநீதி நாளை முன்னிட்டு, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், சென்னை - அண்ணா சாலை,சிம்சன்அருகே உள்ள தந்தை பெரி-யாரின் சிலைக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரி-யாதை செலுத்தினார்.

பெரியார் சிலைக்கு மரியாதை செலுத்திய பின் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "சமத்துவ இலக்கை நோக்கி சமூகநீதிப் பாதையில் சுயமரியாதையோடு நடைபோடுவோம்" என தெரிவித்-துள்ளார்.

பின்னர், அண்ணா அறிவாலயத்தில், சமூகநீதி நாள் உறுதி ஏற்றார்.

முன்னதாக அவர் பகிர்ந்த மற்றுமொரு பதிவில், "தமிழர் தலைமுறை தலைநி-மிரப் பாடுபட்ட பகுத்-தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்குப் புரட்சி வணக்கம். பல தலைமுறைகள் ஆதிக்கத்துக்குப் பணிந்தன. ஒரு தலை-முறை பெரியார் நிகழ்த்தியபுரட்சியைக் கண்டது. பல தலைமு-றைகள் அதன் மாற்-றத்தைக் காண்கின்-றன.

ஆனாலும், ஆதிக்கம் இன்னும் முற்றாக அகலவில்லை. அதனை அடையாளம் காண வேண்டியது வரும் தலைமுறைக-ளின் பொறுப்பும்கூட. வெளிச்சமற்ற இடம் இருள்; கேள்விகளற்ற சமூகம் அதைவிடப் பேரிருள். "ஏன்? எதற்கு? எப்படி?" என்ற கேள்விகள் உயிரோடு இருக்கும்வரை,இருள் நம்மை அண்டாது. பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடர், தலைமுறைகள்கடந்து ஒளிரட்டும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

# நிலவில் புதிய பெரிய பள்ளம்; அறிந்திராத ஆச்சரியங்களும் அதிசயங்களும்... நாசா விண்கலத்தின் அரிய கண்டுபிடிப்புகள்



நிலவில் புதிய பெரிய பள்ளம் மற்றும் பல்-வேறு ஆச்சரியம் நிறைந்த தகவல்களை நாசா விண்கலம் கண்ட-றிந்துள்ளது.

பூமியின் துணைக்கோளாக அத-னுடன் சேர்ந்து சுற்றி வரும் நிலவில் பல்வேறு ஆச்சரியங்களும் அதிச-யங்களும் காணப்படு-கின்றன. கவிஞர்களால் பாடப்பட்டும், பெண்க-ளுடன் ஒப்பிட்டு வர்-ணிக்கப்பட்டும் வரும் இந்த நிலவில் பல்வேறு உலக நாடுகளும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன.

நிலவில் ஆய்வு செய்-வதற்காக அமெரிக்கா-வின் நாசா விண்வெளி ஆய்வு கழகம்,விண்கலம் ஒன்றை அனுப்பியது. எல்.ஆர்.ஓ. எனப்படும் அந்தவிண்கலம் 2 ஆண்-டுகளுக்கு முன்பு பல்-வேறு புகைப்படங்களை அனுப்பி உள்ளது.

இதில், 2024-ம் ஆண்டு மே மாதம் அனுப்பிய புகைப்படம் அப்போது ஆய்வாளர்களால் சரி-வர ஆய்வு செய்யப்பட-வில்லை. குவிந்திருந்த புகைப்படங்களால், 2025-ம் ஆண்டு ஆகஸ்டு வரை அதில் பெரிய அளவில் கவனம் செலுத்தப்பட-வில்லை.

இந்த நிலையில், நில-வில் 2024-ம் ஆண்டில் வால் நட்சத்திரம் அல்-லது குறுங்கோள் ஒன்று மோதி தாக்கம் ஏற்ப-டுத்தி உள்ளது. இதனை பூமியில் உள்ள மற்றும் விண்வெளியில் உள்ள தொலைநோக்கிகள் கூட கண்டறியவில்லை. அவற்றால் பதிவு செய்ய முடியாதஅளவுக்குஇந்த நிகழ்வு தப்பியுள்ளது.

132 ஆண்டுகள்

ஆனால், இந்த எல்.ஆர்.ஓ. எடுத்து அனுப்-பிய புகைப்படத்தில் நில-வில் ஏற்பட்ட மோதலால் உண்டான புதிய பெரிய பள்ளம் ஒன்று பதிவாகி-னது தெரிய வந்துள்ளது. அது ரோமன் கொலோ-சியம் எனப்படும் பழமை வாய்ந்தகட்டிடம்ஒன்றை விட அளவில் பெரியது. இந்த ஆழ்ந்த பள்ளம் 728 அடி அளவில் பரந்து விரிந்தும், 141 அடி ஆழ-மும் கொண்டுள்ளது.

சமீப காலங்களில் சூரிய குடும்பத்தில் கண்டறியப்பட்ட மிக பெரிய பள்ளம் இது என அறியப்படுகிறது. 132 ஆண்டுகளுக்கு ஒரு முறையே இதுபோன்ற பெரிய நிகழ்வுகள் ஏற்ப-டும். இந்த நிகழ்வானது அரிய, வாழ்வில் ஒரு முறையே கவனிக்கப்பட கூடிய ஒன்றாக இருக்-கும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இந்த எல்.ஆர்.ஓ. கண்ட-றிந்த சாதனை அளவிலான பெரிய பள்-ளம் போன்று இந்த புதிய பள்ளம் 3 மடங்கு பெரியது.இதற்கு, ஹூஸ்டன் நிலவு மற்றும் கோள் மையத்தின் முன்-னாள் இயக்குநரான, மறைந்த தாமஸ் மெக்-கெட்சின் என்பவரின் பெயர் சூட்டப்பட்டு உள்-ளது.

இந்த மோதலால், நில-வில் தூசு மற்றும் பாறை துகள்கள் எதிர்பார்த்த-தற்கும் மேலாகபல்வேறு பகுதிகளில் தூக்கி எறி-யப்பட்டு உள்ளது. அது 100 கி.மீ. தொலைவிற்கு பரவி காணப்படுகிறது. இந்த புதிய பள்ளத்திற்கு சுற்றிலும் 7 கி.மீ.அகலத்-தில் குளிர் பகுதி பரவி-யுள்ளதும் வேறோர் ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டு உள்-ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



"உங்களைத்தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், பருவாச்சி ஊராட்சி, சத்யா நகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.09.2026) சாப்பிட்டுப் பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

# ஓய்வு பெற்ற நீதிபதியின் 80வது சதாபிஷேக விழா



அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகம் மற்றும் தனியார் நாளிதழ் இணைந்து நடத்தும், நீதியரசர் கற்பக விநாயகம் 80வது, சதாபிஷேக பிறந்த நாளை முன்னிட்டு, பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிதியரசர் எம்.கற்பக விநாயகத்தின் 80வது, சதாபிஷேக பிறந்த நாள் விழா இன்று கோவை ராமநாதபுரம் பகுதியில் உள்ள மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வுக் கழகத்தின் தேசிய கெவரவ தலைவராக உள்ள நீதியரசர் கற்பக விநாயகத்தின் பிறந்த நாளை முன்னிட்டு, மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் நிறுவன தலைவர், முனைவர் ஆர்.கே குமார் தலைமை உரை ஆற்றினார். கோவை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் முதுநிலை தமிழ் ஆசிரியர் ராமலட்சுமி வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் ஆசிரியர் ப ழ னி ய ம் ம ா ள் , நீதியரசர் கற்பக விநாயகத்திற்க்கு தனது வாழ்த்துக்களுடன் சால்வை அணிவித்து, சிறப்பு பரிசுகள் வழங்கி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். தொடர்ந்து பள்ளி மாணவ மாணவியர்கள், சுமார் 540 பேர், நீதியரசர் கற்பக விநாயகத்திடம் ஆசி பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் அமைப்பின் மாநில தலைவர் ராஜேஷ் குமார், வழக்கறிஞர் பிரிவு மாவட்ட தலைவர் சுந்தர பாலன், மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், மற்றும் ரமேஷ் குமார், மாவட்ட செயலாளர் முத்துக்கு மார், மாவட்ட மகளிர் அணி தலைவி சாந்தி, மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர் பிரிவு துணைத் தலைவர் உமா மகேஸ்வரி, துணைத் தலைவர் உளவு பிரிவு சிவச்சந்தி ரன், ஒருங்கிணைப்பு செயலாளர் லாசர் ராஜன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக கோவை மாநகராட்சி 63 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாந்தி முருகன் நன்றியுரை கூறி விழாவை நிறைவு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழக வெற்றி கழக கொள்கை தலைவராக இருக்கக்கூடிய தந்தை பெரியாரின், பிறந்த தினத்தை முன்னிட்டு கோவை, காந்திபுரத்தில் உள்ள தந்தை பெரியாரின் திருஉருவ சிலைக்கு மலர் மாலை, அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக்கழக கோவை மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் தேன் குமார், பகுதி செயலாளர் காலனி முஸ்தபா, கோவை மாநகராட்சி 45 வார்டு செயலாளர் தமிழரசி, குமார், கோவை பாஷா, டேனியல், மகளிர் அணி அனைத்து நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டு பெரியாரின் பிறந்தநாளை கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் அந்தேரிப்பட்டி ஊராட்சி பெரிய ஜோகிப்பட்டி கிராமத்தை சேர்ந்த ஜே ஜே பிரபுஎன்பவர்நீண்டகாலமாகஅதிமுகவில்உறுப்பினராகஇருந்துகூட்டுறவுசங்கதலைவராகவும்பதவிவகித்துவந்துள்ளார் தற்போது கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆசியோடும் துணை பொது செயலாளர் கே பி முனுசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படியும் இவருக்கு மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர் அறிவித்துள்ளார்கள் இதனால் இவர் கட்சியை ஒருங்கிணைத்து செல்வார் என்று ஆரம்பகால கட்சித் தொண்டர்கள் கடை கோடி தொண்டர்கள் வரை வரவேற்கின்றனர் தற்போது கட்சியும் ஒன்றியத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளதால் இவர் அனைத்து இளைஞர்களையும் ஒருங்கிணைத்து கட்சிக்காக பாடுபடுவார் என்று இளைஞர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் பெருமிதம் அடைந்து வருகிறார்கள் இவர் அனைத்து இளைஞர்களையும் ஒருங்கிணைத்து செயல்படுவேன் என்றும் கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபடுவேன் என்றும் உறுதுணையாக தெரிவித்துள்ளார் இது இளைஞர்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது.



# கோவையில் சிருஷ்டி 2026 கண்காட்சி மற்றும் விற்பனை தொடக்கம்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தமிழ்நாடு கைவினைக் கழகம் சார்பில் ஏற்பாடு செ ய் ய ப் ப ட் டு ள் ள 'சிருஷ்டி 2026' கண்காட்சி மற்றும் விற்பனை கோவையில் இன்று தொடங்கியது.

கோவை சுகுணா கல்யாண மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சி செப்டம்பர் 17 முதல் 19-ஆம் தேதி வரை 3 நாட்கள் நடைபெறுகிறது. தமிழகத்தின் பாரம்பரிய கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை ஊக்குவிக்கும் வகையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில், 66-க்கும் மேற்பட்ட விற்பனை அரங்குகள் இடம்பெற்றுள்ளன.

புடவைகள், ஜவுளிகள், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தை களுக்கான ஆடைகள், நகைகள், வீட்டு அலங்காரப் பொருட்கள், படுக்கை விரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும், பார்வையாளர்களை கவரும் வகையில் பல்வேறு உணவு வகைகளுடன் 11 உணவு அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 29 ஆண்டுகளாக கோவையில் நடைபெற்று வரும் 'சிருஷ்டி' விற்பனை, கைவினைஞர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நேரடியாக இணைக்கும் முக்கிய தளமாக இருந்து வருகிறது. இந்த விற்பனையின் மூலம் கிடைக்கும் வருவாய், கோவையில் ஆண்டுதோறும் நடைபெறும் கைவினைப் பொருட்கள் சந்தையில் பங்கேற்கும் கைவினைஞர்களுக்கான செலவுகளுக்கு மானியமாக பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பாரம்பரிய கைவினை மற்றும் கைத்தறி பொருட்களை ஒரே இடத்தில் வாங்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ள 'சிருஷ்டி 2026' கண்காட்சிக்கு பொதுமக்கள் வருகை தரலாம்.

# கோவையில் நடைபெற்ற விநாயகர் ஊர்வல நிகழ்ச்சி



கோவை மசக்காளிபாளையம் பகுதியில், இந்து மக்கள் கட்சி தமிழகம் சார்பில் 29-வது ஆண்டு விநாயகர் சதுர்த்தி விசர்ஜன ஊர்வல நிகழ்ச்சி நடைபெற்றது இதில் வரிசையாக விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்து சென்ற இளைஞர்கள்..

இந்து மக்கள் கட்சி தமிழகம் சார்பில் 29-வது ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் விசர்ஜன ஊர்வலம் கோவை பீளமேடு அடுத்த மசக்காளிபாளையம் பகுதியில் விமரிசையாக நடைபெற்றது.

பீளமேடு பிளேக்மாரியம்மன் கோவில் பின்புறம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தலைமை விநாயகருக்கு, அதிகாலை கணபதி ஹோமம் மற்றும் கோமாதா பூஜையுடன் வழிபாடுகள் தொ ட ங் கி ய து . தொடர்ந்து காலை, மாலை சிறப்பு பூஜைகளும் அன்னதானம் நடைபெற்றது விழாவின் முக்கிய நிகழ்வான விசர்ஜன ஊர்வலம் மசக்காளியாளையம் தன்ராஜ் திடலில் இருந்து தொடங்கி சிங்காநல்லூர் குளக்கரை வரை நடைபெற்றது. விஜர்சன ஊர்வலத்தை, பாலாஜி உத்தம ராமசாமி கொ டி ய சை த் து தொடங்கி வைத்தார். ஜமாப் அடித்து, தொண்டர்கள் உற்சாக நடனமாடி விநாயகர் சிலைகளை ஊர்வலம் எடுத்து சென்றனர்.

இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜூன் சம்பத் தலைமையில் நடைபெறும் இந்த ஊர்வலத்தில், மாநில செயலாளர் கே.ஆர். சங்கர், மாநில துணைச் செயலாளர் முருகன், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட பொதுச் செயலாளர் சந்தோஷ் , மாவட்ட பொதுச் செயலாளர் சிவக்குமார் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்த க்கது.

## தந்தை பெரியாரின் 148வது பிறந்த நாளான சமூக நீதி நாளை முன்னிட்டு,

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது



ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது இந்நிகழ்வில் மண்டல தலைவர்கள் மாமரத்துப்பாளையம் எஸ்.கோபி, ஆர்.விஜய பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டத் த லை வ ர் டி.திருச்செல்வம், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஏ.மாரியப்பன், மாவட்ட பொதுச் செயலாளர்கள் இரா.கனகராஜன், டெக்ஸ் ஏ. அ ன் ப ழ க ன் , எ.வின்சென்ட், ஏசி. சாகுல் அமீது, மாவட்ட ஊடகப் பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என்.பாஷா, சேவாதளம் மாவட்ட தலைவர் எஸ்.முகமது யூசுப், துணைத் தலைவர் ர ா ஜ ா ஜி பு ர ம் பி.குமரேசன், முன்னாள் எஸ்.சி. பிரிவு மாவட்ட தலைவர் கே.பி.சின்னசாமி, மாவட்ட நிர்வாகிகள் ராஜாஜிபுரம் சிவா, ஆர்.என். பு தூ ர் , ஒ ய் ய ா ங் க ா டு பெருமாள் மணி, சூரம்பட்டி விஜயகுமார், வேன் ராமசாமி, நெசவாளர் அணி எம்.வி. விஜயராகவன், பெரியார் நகர் செந்தில், டீக்கடை லோகு, பி.எஸ்.பார்க் சரவணன், ஆர்.புவனேஸ்வரி, சோனியா உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் தந்தை பெரியாரின்148வது பிறந்த நாளையொட்டி,

# கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்



ஈரோடு மாநகராட்சி, பெரியார் வீதியில் உள்ள தந்தை பெரியார் அண்ணா நினைவக த்தில், தந்தை பெரியார் அவர்களின் 148-வது பிறந்த நாளையொட்டி, கைத்தறி,துணி நூல் மற்றும்கதர்த்துறைஅமைச்சர்ம.விஜய்பாலாஜி மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர் நேற்று (17.09.2026) தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

"தொண்டு செய்து பழுத்த பழம்" எனப் போற்றப்பட்ட தந்தை பெரியார், தமிழ் மண்ணில் பெரும் சமுதாயப் புரட்சிநிகழ்த்தியபெருந்தகையாளர் ஆவார். தீண்டாமை ஒழிப்பு, பெண் சுதந்திரம் மற்றும் சமஉரிமை. சாதி ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் அனைவரும் சமமாக கருத வேண்டும் என்பது போன்ற பல்வேறு சமூக சீர்திருத்தங்களையும் ஏற்படுத்துவற்காகவே தனது வாழ்நாள் முழுவதும் அற்பணித்தவர் ஆவார்.இத்தகையசிறப்பு வாய்ந்த தந்தை பெரியார் அவர்களை சிறப்பிக்கும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் அவர் பிறந்த இல்லத்தினை முன்னாள் முதல்வர் தந்தை பெரியார் அண்ணா நினைவகமாக மாற்றி, அவர்தம் வாழ்க்கை வரலாறு மற்றும் கருத்துக்களை அடுத்த தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையினில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வந்தார். மேலும்,தமிழ்நாடு அரசு தந்தைபெரியார்அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர்17ஆம்நாளை சமூகநீதி நாளாக அறிவித்து அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, நேற்றைய தினம்(17.09.2026),தந்தை பெரியார் அவர்களின் 148-வது பிறந்த நாள் அரசு விழாவாககொண்டாடும் வகையில், கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் ஈரோடு மாநகராட்சி, பெரியார் வீதியில் உள்ள தந்தை பெரியார் அண்ணா நினைவகத்தில், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலைஅணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் அவர்கள் 148-வது தந்தைபெரியார்அவர்களின் பிறந்தநாளையொட்டி பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இவ்விழாவில், ஈரோடு மாநகராட்சி மேயர் சு. நாகரத்தினம் சுப்பிரமணியம். சட்டமன்ற உறுப்பினர்கள் கா.க.ஆனந்த் மோகன் (ஈரோடு மேற்கு), து. சண்முகன் (மொடக்குறிச்சி),மரு.சுதாகர்(காட்பாடி), முதன்மை கல்வி அலுவலர் முனைவர். மான்விழி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.மகேஸ்வரன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள்செ.கலைமாமணி (செய்தி), சு.செந்தி ல்குமார் (விளம்பரம்), ஈரோடு வட்டாட்சியர் கவிதா, கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளையொட்டி அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.09.2026) மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன்மாவட்டஆட்சியரின்நேர்முகஉதவியாளர்(பொது)தேன்மொழி,செய்திமக்கள்தொடர்புஅலுவலர்சு.மகேஸ்வரன் உட்பட உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

# சமூக நீதி நாளை முன்னிட்டு சமூக நீதி நாள் உறுதி மொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்

ஈரோடு மாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்சமூகநீதிநாளை முன்னிட்டு சமூக நீதி நாள் உறுதி மொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

கூட்டரங்கில், மாவட்ட ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில், நேற்று (17.09.2026) சமூக நீதி நாளை முன்னிட்டு சமூக நீதி நாள் உறுதி மொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

செப்டம்பர்17 சமூகநீதி நாளாக கொண்டாடப்படும்என்று அறிவித்துள்ளதன்படி, நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியையும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் முறைகளாகக் கடைப்பிடிப்பேன்! சுயமரியாதை ஆளுமைத் திறனும் - பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்! சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன்! மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன்.சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதியேற்கிறேன்!

என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பின் தொடர்ந்து வாசித்து ஏற்றுக் கொண்டனர். முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர், ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் தேன்மொழி (பொது), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சு.மகேஸ்வரன் உட்பட அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் 2வது நாளாக ஈரோடு மாவட்டம், பவானி, வர்ணபுரத்தில் உள்ள நகரவை நடுநிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் காலை உணவை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.09.2026) சாப்பிட்டுப்பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

# வானிலை முன்னறிவிப்பு: நீலகிரி, கோவையில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டங்களில்(செப்.18) ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மராத்வாடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து மன்னார் வளைகுடா வரை, உள் கர்நாடகா மற்றும் தமிழக பகுதிகள் வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வுபாதைநிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் (செப்.18) நீலகிரி,கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இதரமேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை,வேலூர்,திருப்பத்தூர், சேலம், திருப்பூர், ஈரோடு,தருமபுரி,நாமக்கல், மதுரை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், அரியலூர், கரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம்,புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தென் தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செப்.19-ம் தேதி நீலகிரி, கோவை, தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, சேலம் மற்றும் திருவள்ளூர்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள் மற்றும் இதர வட தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செப்.20, 21 தேதிகளில் நீலகிரி, கோவை, திண்டுக்கல்,தருமபுரி,கிருஷ்ணகிரி, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.இதர வட தமிழகத்தில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், இதர தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செப்.22, 23 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (செப்.18) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மழைப் பொழிவு: தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருச்சி மாவட்டம் துறையூர், விழுப்புரம் மாவட்டம் மயிலம், திண்டிவனத்தில் தலா 9 செ.மீ, சேலம் மாவட்டம் ஏற்காடு, ஓமலூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஆகிய இடங்களில் தலா 7 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

# "டெங்கு உயிரிழப்புகளுக்கு தமிழக அரசின் அலட்சியமே காரணம்" டி.டி.வி. தினகரன் குற்றச்சாட்டு



சென்னை: "முறையான திட்டமிடல் இல்லாமல் செயல்படும் மருத்துவத் துறையின் அலட்சியப் போக்கே தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பால் 9 பேர் உயிரிழப்புக்கு காரணம்" என அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் சுமார் 16 ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, அதில் 9 பேர் உயிரிழந்திருப்பதாக ஊடகங்களிலும், நாளிதழ்களிலும்வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது.

டெங்கு காய்ச்சலால் ஏற்படும் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து, போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், டெங்குவைப் பரப்பும் ஏடிஸ் (Aedes) கொசுக்களை ஒழிப்பதிலும் சுகாதாரத்துறை காட்டிய அலட்சியமே 9 பேரின் உயிரிழப்புக்குக் காரணம் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப பரவும் நோய்த்தொற்றுகளின் பாதிப்பு அதிகரித்த பின்னரே நடவடிக்கை எடுக்கும் அணுகுமுறையைக் கைவிட்டு, பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பாகவே அதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு சுகாதாரத்துறைக்கு உண்டு என்பதை இனியாவது உணர்ந்து செயல்பட வேண்டும்.

எனவே, தமிழகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சலுக்கு அடிப்படைக் காரணமான கொசுக்களை ஒழிக்கும் பணிகளைத் தீவிரப்படுத்துவதோடு, டெங்குவால் பாதிப்புக்குள்ளாகும் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சைகளை வழங்கிட வேண்டும் என சுகாதாரத்துறையையும், தவெக அரசையும் வலியுறுத்தும் இந்நேரத்தில், பொதுமக்களும் மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையுடனும்இருந்திட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் 2வது நாளாக ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சி, காமராஜர் பகுதியில் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# கூட்டணி குறித்து சரியான நேரத்தில் அறிவிக்கப்படும் பாமக ஆதரவு குறித்த கேள்விக்கு எடப்பாடி பழனிச்சாமி பதில்



தமிழகத்தில் புதிதாக அமைந்துள்ள தமிழக வெற்றிக்கழக ஆட்சிக்கு பிறகு தான் அதிக ஊழல் நடைபெற்று உள்ளது. முன்புகொடுத்ததைவாங்கினார்கள் இப்போது டிமாண்ட் செய்து வாங்குகிறார்கள்.*

குதிரை பேரம் மூலமாக விலைக்கு வாங்கி ராஜினாமா செய்ய வைத்து. மீண்டும் தேர்தலில் போட்டியிட வைக்கிறார்கள். மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக செய்திருப்பது கண்டிக்கத்தக்கது இந்த தேர்தல் மூலமாக நாட்டு மக்கள் தமிழக வெற்றி கழகத்திற்கு பாடத்தை வழங்குவார்கள்.*முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மதுரை சிந்தாமணி பகுதியில் உள்ள தனியார் விடுதியில் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறுகையில்:

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெற்றுள்ளது. இந்தக் குடமுழுக்குவிழாபல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு இறைவனைபிரார்த்தனைசெய்திருக்கும் நல்ல நேரத்தில் உங்களை சந்திக்கிறேன்.

தமிழக முதல்வர் அண்மையில் தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க லண்டன் சென்றுள்ளார். இன்று தமிழகம்திரும்புவதாகஊடகத்தில் செய்தி வந்துள்ளது. தொழில் முதலீட்டை ஈற்பதற்காக சென்று உள்ள முதல்வர் தொழில் துறை அமைச்சர் மற்றும் அவரது செயலாளரை அழைத்துச் செல்லவில்லை. அவர்களை அழைத்துச் சென்று இருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் சம்பந்தமில்லாத அதிகாரிகளை அழைத்துச் சென்று முதலீடுகளை மேற்கொள்ளாத பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது.

தமிழகத்தில் சுமார் 32 இடங்களில் மதர் சன் நிறுவனம் உள்ளது. சென்னையில் அதற்கு அலுவலகம் இருப்பதாக தகவல் வந்துள்ளது. அப்படி இருக்கும்போது முதல்வர் லண்டனில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதாக பத்திரிக்கையில் செய்தி வந்துள்ளது. இந்தியாவில் அலுவலகம் இருக்கும்போது அங்கே சென்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டது ஏன். தொழில் முதலீடை ஈர்க்க சென்றுள்ளாரா இன்ப சுற்றுலா சென்றுள்ளாரா என மக்கள் கேட்கும் அளவில் உள்ளது.

மானிய கோரிக்கை விவாதத்தின் போது சொந்த பிரச்சனையை தான் பார்க்க முடிந்தது. மக்கள் பிரச்சனை குறித்து எதுவும் பேசவில்லை. ஒரு நாளைக்கு பத்து மணி நேரம் சட்டமன்ற நிகழ்வு நடைபெற்றது. முதல் மூன்று மணி நேரம் தான் மக்கள் பிரச்சினையை பேசினார்கள். மற்ற ஏழு மணி நேரம் சொந்த பிரச்சனையை ஆளுங்கட்சி எதிர்க்கட்சி மேல் குற்றசாட்டு வைப்பதும் எதிர்க்கட்சி அதற்கு பதிலடி கொடுப்பதும் இன்று சட்டசபையின் நேரத்தை வீணடித்தனர். ஆக்கப்பூர்வமான விவாதம் நடைபெறவில்லை. மக்கள் எள்ளி நகையாடும் அளவிற்கு சட்டமன்ற நிகழ்வு நடந்துள்ளது.சினிமாவில் ந டை பெ று ம் நிகழ்ச்சிகளை போல் தான் சட்டமன்றத்தை மக்கள் பார்த்தார்கள்.

தமிழகத்தில் கடுமையான மின்வெட்டு நடைபெறும் ஆனால் அமைச்சரை கேட்டால் மின்வெட்டு இல்லை என்றார். ஆனால் அவர்கள் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டகூட்டத்தில்திருமாவளவன், கம்யூனிஸ்ட் சண்முகம் கலந்து கொண்ட கூட்டத்தில வருவாய்த்துறை அமைச்சர் பேட்டி கொடுக்கும்போது மின்வெட்டு நடைபெற்றது இதெல்லாம் அதற்கு சாட்சி.

அமைச்சர் மின்வெட்டு இல்லை என்று இன்னும் மறைப்பது அர்த்தமில்லை. அக்கப்பூர்வமான விளக்கம் வேண்டும். மின்சாரத்துறை அமைச்சர் மின்வெட்டு இல்லை என்று சொல்லிக்கொண்டு மின்சார பற்றாக்குறை இருப்பதாகவும் அதை ஈடு செய்ய 2000 மெகா வாட் மின்சாரம் வெளியில் இருந்து வாங்குவதாக குறிப்பிட்டு இருக்கிறார். மின் வெட்டு இல்லை என்றால் எதற்காக வெளி சந்தையில் இருந்து வாங்கவேண்டும். தமிழகத்தில் மின்வெட்டு இருப்பது எதார்த்தமான நிலை. இரவு நேரத்தில் மின்வெட்டு ஏற்படுவதும் மக்கள் தூக்கத்தை தொலைத்ததற்கு காரணம் தமிழக அரசு. அரசு இனிமேலாவது விழித்துக் கொண்டு மக்களுக்கு த டை யி ல் லா மின்சாரத்தை வழங்க வேண்டும்.

இந்த அரசு ஏற்பட்ட பிறகு புதிய அறிவிப்பு வரும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். புதிய பெரிய அறிவிப்புகள் எதுவும் வரவில்லை ஒரு சில திட்டங்கள் தான் வந்துள்ளது. தேர்தல் நேரத்தில் தமிழக வெற்றிக்கழகம் அறிவித்த அறிவிப்புகளையும் அறிவிக்கவில்லை மக்களுக்கு ஏ மா ற் ற ம் தா ன் மிஞ்சுகிறது.

தமிழகத்தில் கடன் அதிகரித்துள்ளது இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு தற்போது அவர்கள் 40000 கோடி கடன் பெற்றுள்ளார்கள். முதல் 36,000 கோடி வருவாய்க்கு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இப்படி இருக்கும் போது புதிய தலைமை செயலகம் கட்ட வேண்டிய அவசியம் என்ன. நிதிநிலை சரி செய்த பிறகு புதிய தலைமை செயலகம் கட்டலாம். தலைமைச் செயலகம் மாற்றுவதில் மாற்று கருத்து இல்லை. மேலும் அந்த கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்யும் போது மீனவர்களுக்கு பாதிப்பில்லாத, போக்குவரத்து நெரிசல் இல்லாத நல்ல இடத்தை தேர்வு செய்து தலைமைச் செயலகம் கட்டினால் பரவாயில்லை. மீனவர்கள் வசிக்கும் பகுதி, கடலோரப் பகுதி, போக்குவரத்து நெரிசல் ஏற்படும் பகுதி, குடியிருப்பு பகுதி இருக்கும் இடத்தில் இப்படி நெருக்கடியான இடத்தில் தலைமை செயலகம் கட்டுவது எந்த விதத்தில் சரியான இந்த அரசு உணர்ந்து மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

தமிழகத்தில் சட்ட ஒழுங்கு அடியோடு சீர்கெட்டு விட்டது. தென்காசி மாவட்டத்தில் வயதான பஞ்சு வியாபாரியை காரில் கடத்தி அவர் அணிந்திருந்த சங்கிலியை பறித்துவிட்டு அவர் இறக்கிவிட்டு சென்றுவிட்டார்கள். சட்ட ஒழுங்கு சந்தி சிரித்து கொண்டிருக்கிறது. தமிழக வெற்றி கழகம் ஆட்சிக்கு வந்த பிறகும் கொள்ளை, கொலை, பாலியல் சீண்டல் நடக்காத நாளே இல்லை. அந்த அளவிற்கு மோசமான ஆட்சி நடைபெறுகிறது.

தமிழகத்தில் புதிதாக அமைந்துள்ள தமிழக வெற்றிக்கழக ஆட்சிக்கு பிறகு தான் அதிக ஊழல் நடைபெற்று உள்ளது. முன்புகொடுத்ததைவாங்கினார்கள் இப்போது டிமாண்ட் செய்து வாங்குகிறார்கள்.

இந்த ஆட்சியில் லஞ்ச ஒழிப்பு துறை பல்வேறு இடங்களில் சோதனை நடத்தி பணங்களை கைப்பற்றியதாக தகவல் வருகிறது. அப்படி என்றால் ஊழல் நடைபெறுகிறது என்றுதானே அர்த்தம்.

கூட்டணி குறித்து சரியான நேரத்தில் அறிவிக்கப்படும்.

எங்க வீட்டில் லஞ்ச ஒழிப்பு சோதனை நடத்தி பிரயோஜனம் இல்லை. டிவிகே வினர் வீட்டில் நடக்க வேண்டும்.

இரண்டு தொகுதியிலும் இடைத்தேர்தலில் நாங்களும் திமுகவும் போட்டி இருக்கிறோம். அப்படி இருக்கும்போது எப்படி கள்ள உறவு என்று சொல்ல முடியும். அவர்களுக்கு என்ன சொல்ல வேண்டியது என தெரியவில்லை. கட்சி தொடங்கி3 ஆண்டுகள் தான் ஆகிறது அதனால் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

சர்க்காரியா கமிஷன் குறித்து பேசுகிறார்கள் அப்போது முதல்வரும் பிறக்கவில்லை அமைச்சரும், பிறந்திருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். இப்போது அதை குறித்து எதற்கு பேச வேண்டும். நேரத்தை வீணாக கழிக்கிறார்களே தவிர ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கவில்லை.

தந்தை பெரியார் என்ன கருத்துக்களை சொன்னார்களோ அதில் மக்கள் ஏற்றுக் கொண்ட கருத்துக்களை அதிமுக செயல் படுத்துகிறது.

அதிமுக ஆட்சி காலகட்டத்தில் நடைபெற்ற திட்டத்திற்கு வெற்றி என பெயர், அவர்கள் எது செய்தாலும் அதில் வெற்றியை சேர்த்துக் கொள்கிறார்கள்.

சபாநாயகர் நடுநிலையாக இருப்பதாக சொல்லிக் கொண்டிருக்கிறார். நேரலையில் மக்கள் பார்க்கிறார்கள் அவர்களுக்கே தெரியும்.

ஒரு யூனிட் 30 ரூபாய் விலை கொடுத்து வாங்குவதாக பத்திரிக்கையை செய்து வருகிறது.

இவர்கள் நிர்வாக திறமையற்ற அரசு. அனுபவம் இல்லாத அரசு என்பதால் இந்த மின் வெட்டு ஏற்படுகிறது. அதிகாரிகளை முன்கூட்டியே அழைத்த பேசி தேவைகளுக்கு ஏற்றவாறு மின் கொள்முதல் செய்திருந்தால் தடையில்லா மின்சாரம் வழங்கி இருக்கலாம். அதிமுக ஆட்சியின்போது கடுமையான மின்வெட்டு இருந்தது அதை மூன்று ஆண்டுகளில் சரி செய்து மின்மிகை இல்லாத மாநிலமாக மாற்றினோம். 24 மணி நேரம் மும்முனை மி ன் ச ா ர ம் விவசாயிகளுக்கு வழங்கினோம்.

தென்காசி மாவட்டத்தில் மெழுகுவர்த்தி, தீப்பந்தத்தை பிடித்துக் கொண்டு விவசாயிகள் கடுமையான போராட்டம் நடத்துகிறார்கள்.

இரண்டு இடைத்தேர்தலும் திணிக்கப்பட்ட தேர்தல் என்று தமிழக வெற்றி கழகம் ஆட்சிக்கு வர துணை நின்ற கட்சிகளே சொல்கிறது. குதிரைபேரம் மூலமாக விலைக்கு வாங்கி ராஜினாமா செய்ய வைத்து. மீண்டும் தேர்தலில் போட்டியிட வைக்கிறார்கள். மக்கள் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக செய்திருப்பது கண்டிக்கத்தக்கது இந்த தேர்தல் மூலமாக நாட்டு மக்கள் தமிழக வெற்றி கழகத்திற்கு பாடத்தைவழங்குவார்கள் என கூறினார்.

# தூத்துக்குடியில் பெரியார் பிறந்தநாள் - திமுக 78வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் கட்சி கொடியேற்றினார்



தந்தை பெரியாரின் 148-வது பிறந்தநாள் மற்றும்திமுககழகத்தின் 78-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு, தூத்துக்குடியில் திமுக சார்பில் விழா நடைபெற்றது.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென்பாகம் காவல் நிலையம் எதிரே அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ஆனந்தசேகரன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, எட்டயபுரம் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட திமுக தலைமை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற திமுக 78-வது ஆண்டு தொடக்க விழாவில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெரியாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர், 60 அடி உயரக் கொடிக்கம்பத்தில் திமுக கட்சிக் கொடியை கீதா ஜீவன் ஏற்றி வைத்து, நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். தொடர்ந்து விழாவில் பங்கேற்ற அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சிகளில் மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாவட்டப் பொருளாளர் சுசி ரவீந்திரன், இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் அருண்குமார், மாநகர அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கிறிஸ்டோபர் விஜயராஜ், மீனவர் அணி அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, பகுதிச் செயலாளர்கள் சுரேஷ்குமார், ஜெயக்குமார், ரவீந்திரன், மாநகரத் துணைச் செயலாளர் முருக இசக்கி, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் பொன்னப்பன், கீதா முருகேசன், பெருமாள் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் செந்தில்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கொடுமுடியில் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சதுர்த்தி விசர்ஜன ஊர்வலம்

ஈரோடு மாநகர் மாவட்டம், கொடுமுடி ஒன்றிய இந்து முன்னணி சார்பில் நடைபெற்ற 16-ஆம் ஆண்டு ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, கொடுமுடி மற்றும் சிவகிரி பகுதிகளில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் சிலைகளின் விசர்ஜன ஊர்வலம் 16.09.2026 அன்று நடைபெற்றது.

கொடுமுடி பழைய பேருந்து நிலையத்தில் தொடங்கிய ஊர்வலம், புதிய பேருந்து நிலையம், மணிக்கூண்டு வழியாகச் சென்று, கொடுமுடி ஸ்ரீ மகுடேஸ்வரர் கோயில் முன்புள்ள புதிய படித்துறையில் விநாயகர் திருமேனிகள் விசர்ஜனம் செய்யப்பட்டன.

நிகழ்ச்சிக்கு இந்து முன்னணி மாவட்ட செயலாளர் ஜெ. கார்த்திகேயன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் பா. ஜெகதீசன் முன்னிலை வகித்தார். திருப்பூர் இந்து முன்னணி கோட்ட செயலாளர் குறிஞ்சி N. சேகர் சிறப்புரையாற்றினார். K. ரகுபதி காவிக்கொடி அசைத்து ஊர்வலத்தை



தொடங்கி வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக P.ஜெயக்குமார், S.P. பாலசுப்ரமணியம், P. செல்லத்துரை, K.ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆன்மிக பெரியோர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

# US sanctions on Russian oil, 100% tariff to make reaching Ukraine deal 'harder', warns Kremlin

After the United States passed a fresh bill to sanction the purchase of Russian crude, the Kremlin warned on Thursday that the bill would have an impact on the negotiations to end the Ukraine war.

Speaking to reporters during a press briefing, Kremlin spokesperson Dmitry Peskov stated that the new sanctions imposed by the US will make reaching a deal for Ukraine "harder."

"We are, of course, monitoring the progress of this document. It falls under the category of unfriendly actions, and of course, the imposition of any



additional sanctions by the U.S. would certainly complicate efforts to find a peace settlement in Ukraine," said Peskov.

This warning from the Kremlin comes as Ukraine and Russia were set for a new round of talks, mediated by Washington.

New trilateral talks between Kyiv, Washington and Moscow are expected to be held in October. This meeting also comes after US envoys Steve Witkoff and Jared Kushner visited Kyiv and Moscow in September as part of an attempt to revive peace talks.

The Ukraine war, which is also known as the bloodiest war in Europe since the Second World War, is now raging on for a fifth year.

On Wednesday, the US House of Representatives passed a sweeping sanctions package intended to increase economic pressure on Russia over its war in Ukraine.

The bill, which warns of 100 per cent tariffs on nations purchasing oil from Russia, has now been sent to President Donald Trump for signature.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.